## கொம்பு சாண உரம் (BD 500)

பையோடைனமிக் (உயிர் ஆற்றல் அல்லது உயிர் சக்தி) விவசாய முறை 1924–ம் வருடம் ஆஸ்திரியா நாட்டின் மேதையான டாக்டர் ருடால்ஃப் ஸ்டெயினர் என்பவரால் சில விரிவுரைகளின் மூலம் விவசாய உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இம்முறையில் கொம்பு சாண உரம் (500 உரம்) (Horn manure-BD 500) என்பது மிக முக்கியமான மட்கு உயிர் உரம். எல்லா விவசாயிகளும் மிக சுலபமாக தங்களது பண்ணையிலேயே தயாரிக்க முடியும்.

அதிக இராசயண பயன்பாட்டால் மண்ணின் மட்கு தன்மை மற்றும் நுண் உயிர்கள் இழந்த நிலையில் உள்ள விவசாய நிலத்தில் இந்த கொம்பு சாண உரத்தை பயன்படுத்தலாம்.

### தேவையான பொருட்கள் :

1) இறந்த பசுமாட்டின் கொம்புகள் : *முதிர்ச்சி அடைந்த பசு அதாவது இரண்டு மூன்று கன்று ஈன்று இறந்த பசுமாட்டின் கொம்புகள்.*

கிடைக்கும் இடம் : *இறைச்சி கடைகள், எலும்பு உரம் தயாரிக்கும் ஆலைகள்.*

2) பால் கொடுத்துக் கொண்டிருக்கும் பசுவின் சாணம்

### தயாரிக்கும் முறை :

கொம்பு சாண உரம் தயாரிக்க எடுக்கப்படும் சாணமானது இரண்டு நாட்களுக்கு முன் இயற்கையில் உள்ள பசும் புற்கள் கொடுக்கப்பட்ட பால் கரக்கும் பசுமாட்டிலிருந்து எடுக்கவேண்டும்.

பசுமாட்டின் கொம்பினுள் சாணத்தை நிரப்ப வேண்டும்.

சாணம் நிரப்பிய கொம்பினை 1.5 அடி (45 செ.மீ.) ஆழக்குழிவெட்டி அதனுள் கொம்பின் அடிபாகம் கீழ்நோக்கி இருக்குமாறு புதைக்க வேண்டும்.

ஒவ்வொரு கொம்பையும் ஒரு இஞ்ச் இடைவெளி விட்டு புதைக்க வேண்டும்.

கொம்புகளை செப்டம்பர் மாதம் மழைக்காலத்திற்கு முன் கீழ்நோக்கு நாட்களில் புதைத்து, பின்னர் வசந்த காலம் தொடங்கும் பொழுது அதாவது 5–6 மாதங்கள் கழித்து மார்ச்–ஏப்ரல் மாதங்களில் வரும் கீழ்நோக்கு நாட்களில் (உயிர்சக்தி விவசாய காலண்டரை பார்க்க) எடுக்கவேண்டும்.

இவ்வாறு எடுக்கப்பட்ட கொம்பில் சாணமானது மட்கிய நிலையில் அதிக நுண்ணுயிர்கள் கொண்ட எருவாக கிடைக்கும். இதுவே கொம்பு சாண உரமாகும்.

### குறிப்பு :

வளமான மண்ணில் தான் கொம்பினை புதைக்கவேண்டும். வளம் குன்றிய மண்ணாக இருந்தால் மண்ணுடன் மட்கிய எருவினை கலந்து அதில் கொம்பினை புதைக்க வேண்டும்.

கொம்பு புதைக்கப்படும் குழிக்கு அருகில் பெரிய மரங்கள் மற்றும் செடிகள் இல்லாமல் இருக்கவேண்டும்.

கொம்பு புதைக்கப்பட்ட தேதி மற்றும் கொம்பின் எண்ணிக்கையை ஒரு சிறிய பலகையில் குறித்து வைக்கவேண்டும்.

கொம்புகளில் வண்ணம் (பெயிண்ட்) பூசப்பட்டிருந்தால் அதனை சுத்தம் செய்யவேண்டும்.

ஒரு முறை உபயோகிக்கப்பட்ட கொம்புகளை இரண்டு அல்லது மூன்று முறை உபயோகப்படுத்தலாம்.

**சேமித்து வைக்கும் முறை :**

கொம்பு சாண உரத்தை ஒரு மண்பானையில் வைத்து குளிர்ந்த காற்றோட்டமுள்ள அறையினுள் வைக்கவேண்டும். பானையை சுற்றிலும் தென்னை நார் கழிவுகளைக் கொண்டு பாதுகாக்க வேண்டும். இவ்வாறு பாதுகாக்கப்படும் கொம்பு சாண உரத்தை 1 ஆண்டு வரை சேமித்து வைத்து பயன்படுத்தலாம்.

**பயன்படுத்தும் முறை :**

ஒரு ஏக்கருக்கு 30 கிராம் கொம்பு சாண உரத்தை 1 பிளாஸ்டிக் வாளியில் 15 லிட்டர் மழைநீர் அல்லது குளோரின் கலக்காத தண்ணீரில் கரைத்து 1 மணி நேரம் சுழி வருமாறு வலது புறமாகவும், இடது புறமாகவும் கலக்கவேண்டும்.

இந்த உரக்கரைசலை கலக்கிய 1 மணி நேரத்திற்குள், கீழ்நோக்கு நாளில் மாலை நேரத்தில், ஈச்சமார் அல்லது பிரஷ் கொண்டு நிலத்தில் பெரிய துளிகளாக விழுமாறு தெளிக்கவேண்டும். இந்த உரக்கரைசலை வருடத்திற்கு 3 முறையாவது மண்ணில் ஈரம் இருக்கும் காலத்தில் பயன்படுத்தவேண்டும்.

1) கோடை மழை காலத்தில் – ஏப்ரல் – மே
2) பருவ மழை காலத்தின் தொடக்கத்தில் – ஆகஸ்ட் – செப்டம்பர்
3) பருவ மழை முடியும் காலத்தில் – டிசம்பர் – ஜனவரி

**பயன்கள் :**

- *இரசாயன உரங்களின் அதிக பயன்பாட்டால் நுண் உயிர் குறைந்த மண்ணுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றல் கொண்டது.*
- *நிலத்தில் உள்ள மண்ணின் மட்குத் தன்மையை அதிகப்படுத்துகின்றது.*
- *மண்புழுக்களின் எண்ணிக்கையையும், நுண்ணுயிர்களையும் அதிகப்படுத்துகின்றது.*
- *பயிர்கள் வறட்சியினைத் தாங்கி வளர்வதற்கு உதவுகின்றது.*
- *பயறு வகைச் செடிகளில் உள்ள வேர் முடிச்சுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.*